| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 17/01/2024 | முதல் | 21/01/2024 |
| | அறிக்கை எண் : | 005/ 2024 | வெளியீட்டு நாள் : | 16/01/2024 | | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (11.01.2024 முதல் 15.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1101 | 12/01 | 13/01 | 14/01 | 15/01 | தேதி | நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | நாள்-5 21/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 29 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 30 | 29 |
| 23 | 23 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 21 | 20 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 1 | 1 |
| 84 | 80 | 83 | 88 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 90 | 90 | 80 |
| 55 | 53 | 53 | 53 | 50 | | 40 | 40 | 50 | 40 | 40 |
| 7 | 9 | 7 | 6 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19 - 25 ஜனவரி 2024):

### மழைப்பொழிவு :

19-01-2024 - 25-01-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவாக காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், கத்திரி, கால்நடை.**

**நெல்:**

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழுக்களின் தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. இதன் அறிகுறிகள், இலைகள் ஊதுகுழல் போல் சுருண்டு அதனுள் புழுக்கள் இருந்து கொண்டு இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிட்டு கழிவுகளை வெளியிடும். இதனால் இலைகள் வெள்ளை நிறத்தில் மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின் போது ஒட்டுமொத்த வயலும் எரிந்தது போல காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டையை முறையே நடவு செய்ததிலிருந்து 37, 44, 51வது நாட்களில் கட்ட வேண்டும்.

**கத்திரி :**

கத்திரி பயிரில் அசுவினி மற்றும் வெள்ளை ஈக்கள் போன்ற சாரு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் காணப்படுகிறது.

இவற்றை கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 50மில்லி வேப்பண்ணெய், 50கிராம் சூடோமோனாஸ், 10மில்லி ஒட்டுப் பசை ஆகியவற்றை நன்கு கலந்து 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 10 மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப் மற்றும் 5 ஊதா நிற ஒட்டும் பசை அட்டைப் பொறி என்ற எண்ணிக்கையில் கட்டி விடவும்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி புட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளில் வெளிப் புறங்களில் மட்டும் பூச வேண்டும்.